PRO DEO ET PATRIA

Thiru P. Ayya Nadar Thirumathi A. Janaki Ammal

# உலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் பா. தமிழரசி

முனைவர் வானதி பகீரதன்

முனைவர் இரத்தின வேங்கடேசன்

முனைவர் நா. பாலாஜி






தமிழ்த்துறை மற்றும் தமிழ் ஆய்வு மையம்

**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி**

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது. தேசியத்தர மூன்றாம் மதிப்பீட்டில் 'A' தகுதி (மூன்றாவது சுற்றில் 4க்கு 3.67 புள்ளிகள்) பல்கலைக்கழக மானியக்குழு வழங்கிய திறன்மிகு கல்லூரி மற்றும் புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில் நுட்பத்துறையின் நட்சத்திரத் தகுதி, தேசியத்தர வரிசைப்பட்டியலில் (NIRF 2019) 51ஆவது இடம் பெற்றது.)

**சிவகாசி - 626 124**



Scanned with CamScanner

# உலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகள்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் பா.தமிழரசி

முனைவர் வானதி பகீரதன்

முனைவர் இரத்தின வேங்கடேசன்

முனைவர் நா.பாலாஜி


PRO DEO ET PATRIA


தமிழ்த்துறை மற்றும் தமிழ் ஆய்வு மையம்

**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி**

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது. தேசியத் தர மூன்றாம் மதிப்பீட்டில் ‘A’ தகுதி (மூன்றாவது சுற்றில் 4க்கு 3.67 புள்ளிகள்) பல்கலைக்கழக மானியக்குழு வழங்கிய திறன்மிகு கல்லூரி மற்றும் புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில் நுட்பத்துறையின் நட்சத்திரத் தகுதி, தேசியத்தர வரிசைப்பட்டியலில் (NIRF 2019) 51ஆவது இடம் பெற்றது.)

**சிவகாசி - 626 124**



Scanned with CamScanner

# உலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகள்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள் : முனைவர் பா.தமிழரசி
முனைவர் வானதி பகீரதன்
முனைவர் இரத்தின வேங்கடேசன்
முனைவர் நா.பாலாஜி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : டிசம்பர் 2019

வெளியீடு : பாடத்திட்ட மேம்பாட்டு அமைப்பு,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

அச்சாக்கம் : முத்து பிரிண்டர்ஸ், விருதுநகர்.

பக்கங்கள் : 580

விலை : ரூ. 700 /-

ISBN No: 978-93-83191-36-9


**International Conference on**

**Global Tamil Creations of Tamil Writers**


Editors : Dr.P.Thamilarasi
Dr. Vanathi Bakirathan
Dr. Rathina Venkatesan
Dr. N.Balaji

Copyrights : Editors

First Edition : December, 2019

Published by : Curriculum Development Cell
Ayya Nadar Janaki Ammal College, Sivakasi.

Printed by : Muthu Printers, Virudhunagar.

Pages : 580

Price : Rs. 700/-


Scanned with CamScanner

| வ.எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 54. | சுரேஷ்குமார்.பா<br>ஹைக்கூ கவிதைகளில் இயற்கை | 235 |
| 55. | சுஜா.ச.அ<br>சீனக் கவித்தொகையும் புறநானூறும் ஓர் ஒப்பீடு | 239 |
| 56. | சூசை ஜெஸிந்தாமெர்சி.ஜோ<br>பட்டினப்பாலை காட்டும் வாழ்வியல் | 244 |
| 57. | சூர்யா, தமிழ் ஆர்வலா.ரா<br>சஞ்சாரம் நாவல் புலப்படுத்தும் இசைக்கலைஞர்களின் வாழ்வியல் | 249 |
| 58. | செல்வஈஸ்வரி.கு<br>சமூக நோக்கில் இணையவழி - 'தமிழ்க் கவிதைகள்' | 252 |
| 59. | சோபியா<br>புறநானூற்றில் பண்டையதமிழர்களின் வாழ்வியல் நெறிகள் | 258 |
| 60. | சந்திரகுமார்.த<br>ஜெயகாந்தன் புதினங்களில் பார்ப்பனர் பண்பாடு | 263 |
| 61. | தங்கராசா கோபிநாத்<br>தமிழர் பண்பாடுகளில் இசையின் மகத்துவம் | 267 |
| 62. | தங்கலட்சுமி.தி<br>ஆட்டம் சிறுகதை ஒரு குறியீட்டுச் சிறுகதை | 271 |
| 63. | தமிழரசன்.உ.ச.எ<br>தமிழ் இலக்கியத்தில் அறிவியல் தொழில்நுட்பச் சிந்தனைகள் | 275 |
| 64. | தமிழரசி.பா<br>புலம் பெயர்ந்த தமிழ்க் கவிஞர்களின் கவிதை வெளிப்பாடு | 280 |
| 65. | தர்மிகா ஜெயதீஸ்<br>ஈழத்துத் திருக்கோயில்கள் வளர்த்த ஆடற்கலை | 285 |
| 66. | தனசுபா.இரா<br>தமிழும் கணிதமும் | 289 |
| 67. | திருப்பதி.ச<br>ரவீந்தரநாத் தாகூரின் படைப்புகள் - ஒரு பார்வை | 294 |
| 68. | தீனதயாளி.வே<br>கவிஞர் கே.சண்முகத்தின் "இருளும் கூட அழகு தான்" கவிதை நூலில் சமூகப் பார்வை | 298 |
| 69. | தேவி.வி<br>புதுக்கவிதைப் போக்கில் கவிஞர் அறிவுமணியின் கவிதைகள் ஓர் ஆய்வு | 304 |
| 70. | நயினார்.மா<br>கேரளத்தின் தமிழிலக்கிய நன்கொடை | 309 |
| 71. | நர்மதா.க<br>தமிழ் மற்றும் இந்தி மொழியின் படைப்பாளர்களின் படைப்புகளில் மனிதவியல் மற்றும் சமூகச் சிந்தனை | 315 |

Scanned with CamScanner

# பட்டினப்பாலை காட்டும் வாழ்வியல்


முனைவர் ஜோ.சூசை ஜெஸிந்தாமேரி

உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி) மதுரை


## முன்னுரை

மன்னரும் மக்களும் வாழ்வியல் மெய்ம்மைகளை உணர்ந்து சிறப்புடன் வாழ்ந்தகாலத்தில் உருவானசங்கப் பாடல்கள், ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தபண்டைத் தமிழர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுபவை. கற்பனைவளமும் கருத்துச் செறிவும் நிறைந்தசங்க பாடல்களைச் சான்றோர்பொருள்,

யாப்பு அடிவரையறை ஆகியன கருதி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இரு பிரிவுகளாக பிரித்தவர். அவற்றுள் நெடும்பாடல்களின் தொகுப்பான பத்துப்பாட்டுள் ஒன்பதாவது நூலாக இடம்பெறும் பட்டினப்பாலை அகமும் புறமும் தழுவிய நூல். பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் இப்பாலைத் திணை நூல் தனித்தன்மை வாய்ந்ததாகத் திகழ்வதோடு, பழந்தமிழகத்தை மக்களின் வாழ்வியலை அறிந்துகொள்ள உதவும் வரலாற்றுப் பெட்டகமாகவும் மிளிர்கிறது.

## பாட்டுடைத் தலைவனும் பாடியபுலவரும்

வான் பொய்த்து வறண்ட காலத்திலும் தான் பொய்க்காது, நீரோட்டத்தையுடைய காவிரி பாயும் சோழ வளநாட்டை ஆட்சிசெய்த கரிகால் பெருவளத்தானே பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன். தாய் வயிற்றில் இருக்கும்போதே தாயம் எய்திய கரிகாலன் முதியோர்க்குமுறைசெய்தவன். வெண்ணிப்போரில் வென்றவன். அறம் திரியாது ஆட்சி செய்த கரிகாலன், நாட்டை வளப்படுத்தக் கல்லணை கட்டி உழவைப் பேணிய வள்ளல். இவ்வள்ளலை புகழ்ந்து பாடிய புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பட்டினப்பாலையைப் பாடியபுலவர் புலமையைப் பாராட்டிப் பதினாறு நூறாயிரம் பொன்னையும், பொன் மண்டபத்தையும் பரிசளித்தா எனக் கல்வெட்டுக்கள் சான்றுபகர்கின்றன.

## செல்வவளம்

காவிரிப் பூம்பட்டினத்தின் கடற்கரையோரங்களில் செல்வச் செழிப்புமிக்கபல இன மக்களும் சேர்ந்துவாழும் பகுதி ‘பாக்கம்’ என அழைக்கப்படுகிறது. செல்வர் வீட்டு அகன்ற முற்றங்களில் காயும் நெல் முதலான தானியங்களைப் பொன்னணிகள் அணிந்த இளம் நங்கையர்கள் காக்கின்றனர். தானியங்களைத் தின்னவரும் கோழிகளை விரட்டுவதற்குத் தங்கள் காதுகளில் அணிந்துள்ள பொற்குழைகளைக் (காதணி) கழற்றி எறிந்ததாகவும் குவிந்துகிடக்க



அக்குழைகள் சிறுவர்கள் உருட்டி விளையாடும் சிறுதேர்களைத் தடுத்ததாகவும் புலவர்குறிப்பிடுகின்றார். இதனை,

**அகல் நகர்வியன் முற்றத்துச்**
**சுடர்நுதல் மட நோக்கின்**
**நேர்இழை மகளிர் உணங்கு உணாக்கவரும்**
**கோழிஎறிந்தகொடும்கால் கனங்குழை**
**பொற்கால் புதல்வர் புரவியின்று உருட்டும்**
**முக்கால் சிறுதேர் முன்வழிவிலக்கும் (20-25)**

என்றபாடல் அடிகள் உணர்த்துகின்றன.

## மறவர்களின் உணவு

வலிமையான போர்த்தொழில் புரிவதில் சிறந்த மறவர்கள் கடலில் பிடித்த இறாலினைச் சுட்டும், வயலிலே பிடித்த ஆமையை வேகவைத்தும் உண்டனர். மணலில் மலர்ந்துள்ள அடப்பம் பூவினையும் நீரில் பூத்த ஆம்பல் பூக்களையும் பறித்துத் தலையில் சூடிக் கொண்டனர். இதனை,

**கருந்தொழில் கலிமாக்கள்**
**கடல் இரவின் சூடு தின்றும்**
**வயல் ஆமைபுழுக்கு உண்டும்**
**வறள் அடும்பின் மலர் மலைந்தும்**
**புனல் ஆம்பல் பூச்சூடியும் (62-66)** என்ற அடிகள் வழி அறியமுடிகிறது.

## வழிபாடுகள்

பரதவர் முழு நிலவுநாளில் மீன் பிடிக்கச் செல்லாதுதம் நிலத் தெய்வமான வருணனுக்கு விழா எடுக்கின்றனர். முழு நிலவு (பௌர்ணமி) நாளில் கடல் அலையின் சீற்றம் மிகுதியாக இருக்கும் என்பதால் மீன் பிடிக்கச் செல்லாது வருணனுக்கு வழிபாடுநடத்தினர் என்பதை அறியமுடிகிறது.

வெண் கூதாளமலரால் கட்டப்பட்ட மாலையை அணிந்தபரதவர்கள், சினைச் சுறாமீனின் கொம்பைநட்டு, கொம்பிலே வருணன் வந்திருப்பதாக எண்ணி, தாழை மலரைச் சூடிக் கொண்டும், பனங்கள்ளைப் பருகியும் தங்கள் மகளிருடன் கூத்தாடினர். இதனை,

**சினைச் சுறவின் கோடுநட்டு**
**மனைச் சேர்த்திடவல் அணங்கினாள்**




Scanned with CamScanner